**ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 27 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 19 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூலை 24 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஆரச்சிக்கட்டுவ பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2017 மார்ச் மாதத்தில் ஏலவிற்பனை செய்யப்பட்ட ரூபா 261,255 தொகையான இயந்திரங்கள் மற்றும் ரூபா 218,370 தொகையான தளபாடங்களின் பெறுமதி 2016 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

(ஆ) 2005 ஆம் ஆண்டிற்குரிய மூலதன நன்கொடை ரூபா 1,033,173 தொகை ஆண்டின் வருமான செலவினக் கணக்கிற்கு செலவு வைக்கும் போது மீண்டும் 2015 ஆம் ஆண்டின் போது 29 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் அத்தொகை திரண்ட நிதித்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஓய்வூதிய திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய உள்ளூராட்சி மன்ற ஓய்வூதியத்தின் பெறுமதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 16,674 ஆக இருந்த போதிலும் ஓய்வூதிய திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தின் பிரகாரம் ரூபா 420,492 ஆக இருந்தமையால் ரூபா 403,818 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் குத்தகை வாடகை வருமானத்திற்குரிய பதிவேடுகளின் பிரகாரம் ரூபா 4,424,957 ஆக இருந்த போதிலும் திரட்டிய நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 4,290,574 ஆக இருந்தமையால் ரூபா 134,383 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

#### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 83,931 பெறுமதியான கடன்பட்டோர் மற்றும் ரூபா 250,000 தொகையான முற்பணம் தொடர்பான பட்டோலைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் இல்லாமை காரணமாக அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் | |
| (i) 158 ஆம் பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதவரி கொடுப்பனவு தவிர்ப்புச் செய்பவர்களுக்கு உரிய அசையும் சொத்துக்களை தடை செய்து ரூபா 7,985,676 ஆன நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 159(1) ஆம் பிரிவு | பிரதேச சபைக்குரிய பெறவேண்டிய குத்தகை வாடகை ரூபா 4,424,957 மற்றும் ரூபா 572,550 ஆன கடை வாடகை என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| நிதிப்பிரமாணம் 371 | 2008, 2009, 2014 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த ரூபா 280,000 ஆன முற்பணத்தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான கணனிகள் மற்றும் கணனி துணைப்பாகங்கள் தொடர்பாக சுற்றறிக்கையின் குறிப்பிட்ட பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,040,231 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,855,078 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா 4,185,153 அதிகரிப்பிற்காக இரண்டு வருமான விடயங்கள் ரூபா 9,048,627 இனால் அதிகரித்தமை செலவின விடயமொன்றில் ரூபா 5,467,073 இனால் அதிகரித்தமையும் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டின் இறுதியில் சேகரிக்கப்பட வேண்டிய ஆதன வரி மற்றும் வரி வருமானங்களில் 67 சதவீதமும், ஏக்கர் வரி வருமானத்தில் 75 சதவீதமும் நீர் வரி வருமானத்தில் 79 சதவீதமும் கடை வாடகை வருமானத்தில் 58 சதவீதமும் குத்தகை வருமானத்தில் 36 சதவீதமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 ஆதன வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட வீதவரி தொகையான ரூபா 2,674,966 இல் ஆண்டில் ரூபா 1,171,734 தொகை மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது பட்டியலிடப்பட்ட தொகையில் 44 சதவீதமாக அளவொன்றாகும்.

(ஆ) முன்னைய ஆண்டுகளின் நிலுவை வீத வரியில் மீளாய்வாண்டில் 29 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 7,985,675 அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 2.3.3 வாடகை

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ரூபா 4,424,957 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 4,289,602 தொகை 2002 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட வேண்டிய வாடகையாக இருந்தது.

### 2.3.4 ஏனைய வருமானம்

சபையினால் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த 05 கடைகளின் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பெறவேண்டிய நிலுவை வாடகை ரூபா 572,550 ஆக இருந்ததுடன் அத்தொகையில் ரூபா 470,418 தொகை 01 ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வரையான காலவீச்சில் அறவிடப்படாமல் காணப்பட்டன.

### 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பிரதம செயலாளரிடமிருந்து அறவிடவேண்டிய முத்திரைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 31,266,067 ஆக இருந்ததுடன், நீதிமன்றத் தண்டப்பணத்தின் பெறுமதி ரூபா 9,718,559 ஆக இருந்தது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) இடமாற்றம் மற்றும் சேவையை விட்டுச் சென்றமை காரணமாக ரூபா 149,210 தொகையான ஊழியர் கடன் 2008 ஆம் ஆண்டிற்கு முன்னர் நிலுவையாக காணப்பட்டதுடன் அத்தொகையை அறவிடுவதற்காக சபையினால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 9 ஆண்டுகள் பழமையான மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டினுள் வீதவரி அறவிடப்பட்ட காரணத்தினால் வீதவரி வருமானம் குறைவடைந்திருந்தது.

(இ) விசேட ஆதனங்களாக இனங்காணப்பட்டிருந்த 22 ஆதனங்களுக்காக புதிய மதிப்பீட்டு பெறுமதி பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2014 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 149,100 பெறுமதியான 84 கூரைத்தகடுகள் நலனாலிகளுக்கு இடையே பகிரப்பட்டிருக்கவில்லை.

(உ) பிரதேச சபைக்குரிய 04 ஏக்கர் 01 ரூட் 26 பேர்ச் அளவிலான 6 காணிகள் மீளாய்வாண்டிற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்திட்டத்தை செயற்படுத்துவதில் முன்னேற்றம்**

35 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 17,082,104 ஆன நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அச்செயற்திட்டங்களுக்கு இடையே ரூபா 5,333,008 மதிப்பீட்டுத் தொகையான 10 செயற்திட்டங்கள் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 05 செயற்திட்டங்கள் 20 – 75 சதவீதத்திற்கு இடைப்பட்ட செயன்முன்னேற்றத்தை மாத்திரம் பெற்றுக் கொண்டிருந்ததுடன் 20 செயற்திட்டங்களின் செயற்பாடுகள் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.3 திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவும்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளொன்றுக்கு 04 தொன் கழிவுப்பொருள் அளவில் சேகரிக்கப்பட்டு வெளித்தரப்பினருக்குரிய காணியில் கொட்டப்பட்டு வருவது தொடர்ந்தும் இடம்பெற்று வரும் நிலைமையில் சுற்றாடல் சிக்கல்கள் உருவாகக் கூடியதாக இருப்பதுடன் திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக முறையான வேலைத்திட்டமொன்று தயாரித்து செயற்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது.

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கையின் பிரகாரம் இரண்டாம் மற்றும் ஆரம்ப தரங்கள் என்ற இரண்டிலும் மொத்தமாக 17 வெற்றிடங்களும் 08 பேர் மிகையாகவும் இருந்தனர்.

**4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 13 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சபையினால் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டிற்காக நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு பரிசோதனையொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| | **முறைமைகள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|
| (அ) | கடன்பட்டோர் | நீண்டகாலமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் அறவீடுகள் நிச்சயமற்ற நிலைமையிலுள்ள கடன்பட்டோர் மீதிகள் தொடர்பாக தேவையான தொடர் நடவடிக்கை எடுக்காமை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | கடன் கொடுத்தோர் | நீண்டகாலமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) | நிலையான சொத்துக்கள் | சபைக்குச் சொந்தமான கணணி மற்றும் கணனி உப பாகங்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்படாமை. |
| (ஈ) | வருமானத்தை சேகரித்தல் | கிடைக்க வேண்டிய வீதவரி, குத்தகை வாடகை, கடை வாடகை, முத்திரைக் கட்டணங்கள் நீதிமன்ற தண்டப்பணம் போன்ற வருமானங்களை முறையாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (உ) | ஊழியர் கடன் | 2008 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஊ) | கழிவுப்பொருள் முகாமைத்துவம் | சபை அதிகாரப்பிரதேசத்தில் நாளாந்தம் சேரும் கழிவுப் பொருட்களை சுற்றாடலுக்கு சாதகமான விதத்தில் வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |